1975 மார்ச் 5]

திரு. எம். சுரேந்திரன் : அலுமினியம் ப்ளோரைடு தொழிற்சாலை ஆரம்பிக்கப் போவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கனவே அலுமினியம் தொழிற்சாலைகளுக்கு மின்சாரக் கட்டணத்தில் மிகவும் சலுகைகள் கொடுக்கப்படுகிறதே அதைப்போன்று இதற்கும் சலுகைகள் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இது அலுமினியத் தொழிற்சாலை அல்ல; ப்ளோரைடு அன்ட் அதர் கெமிக்கல்ஸ் சம்பந்தமான தொழிற்சாலை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி ஏற்கனவே 28—1—1974 ஆம் தேதியில் கேள்வி எண். 197-க்குப் பதில் அளிக்கப்பட்டதிலிருந்து எழுப்பப்பட்டிருக்கிறது. ஏற்கனவே கொடுக்கப்பட்ட கேள்வி என்ன? அமைச்சர் அவர்கள் அன்றைய தினம் அதற்குக் கொடுத்த பதில் என்ன என்று கூறுவார்களா ?

(முற்பகல் 9-30)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இந்தக் கேள்விக்கான பதிலை ஒட்டித்தான் சொல்ல முடியுமே தவிர, அந்தக் கேள்விக்கான பதிலைச் சொல்ல இயலாது. அங்கத்தினர்தான் அதைப் படித்து விட்டு வர வேண்டும்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, பாயிண்ட் ஆஃப் ஆர்டர், 28—1—1974 ஆம் தேதி அந்தக் கேள்விக்கு அளித்த பதிலில், இந்த அலுமினியம் ப்ளோரைட் பேக்டரி மாநிலத்தில் எல்லா மாவட்டங்களிலும் அமைக்கப்படும் என்று அன்றைக்கிருந்த தொழில் அமைச்சரவர்கள் கூறினார்கள். அந்த வாக்குறுதி காப்பாற்றப்படுமா என்ற விஷயம் அஷ்யூரன்ஸ் கமிட்டியிலேயும் எழுப்பப்பட்டது. ஆகவே, அது சம்பந்தமாக என்ன கூறுகிறார்கள் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதில் என்ன பாயிண்ட் ஆஃப் ஆர்டர் இருக்கிறது என்று தெரியவில்லை. அலுமினியம் ப்ளோரைட் பேக்டரி ஒன்றுக்கே டெல்லியிடம் தவம் கிடக்கிறோம். அந்தத் தவம் முடிந்து அவர்கள் அனுமதித்த பிறகு மற்ற மாவட்டங்களைப்பற்றி யோசிக்கலாம்.

இரயில்வே செஸ் நிதி

*** 190 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில் ஊராட்சி ஒன்றியங்களுக்குச் சேரவேண்டிய இரல்வே செஸ் எந்த ஆண்டு வரை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இன்னும் பகிர்ந்தளிக்கப்படவில்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்த ரயில்வே செஸ் நிதி எநத அடிப்படையில் பகிர்ந்து அளிக்கப்பட இருக்கிறது? இந்த நிதியைக் கொண்டு ஊராட்சி ஒன்றியங்கள் எந்தெந்த வகையிலே செலவினங்களைச் செய்து கொள்ளலாம் என்று அனுமதிக்கப்பட இருக்கிறது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அவர்கள் தஞ்சை மாவட்டத்தைப் பற்றிக் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர், சாலைப் பணிகள் 34 ஒன்றியங்களில் 508 வேலைகளுக்கு எஸ்டிமேட் போட்டு அனுப்பியிருக்கிறார்கள். அது சார்க்காரின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தஞ்சை மாவட்டத்தில் பகிர்ந்து அளிக்கப்பட இருக்கும் இந்த நிதியில் மாயூரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு எவ்வளவு அளிக்கப்பட இருக்கிறது என்பதை அறிய இயலுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தனியான விவரம் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இரயில்வே கட்டணத்தைப் பொறுத்த வரையில் இன்றைக்கு செஸ் நிதி எவ்வளவு இருக்கிறதோ அது மாநிலங்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்படுகிறதே, நமது மாநிலத்திற்கு எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, இது நிலத்தின் மீது போடப்பட்டு இருக்கிறது. இதற்குமுன் சில மாவட்டங்களில், சேலம், கோவை, தஞ்சை, திருநெல்வேலி மாவட்டக் கழகங்களே இரயில்வேயை நிர்வகித்து வந்திருக்கிறார்கள். அப்படியே மாற்றியதிலிருந்து லேண்ட் செஸ் என்று கணக்கு வந்திருக்கிறது. அதன் மூலம் தஞ்சை மாவட்டத்திற்கு வந்திருப்பது 1.27 கோடி ரூபாய், சேலம் மாவட்டத்திற்கு 40.17 இலட்சம் ரூபாய். தென்னார்க்காடு மாவட்டத்திற்கு 9.22 இலட்சம் ரூபாய், திருநெல்வேலி மாவட்டத்திற்கு 7.7 இலட்சம் ரூபாய், திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு 1.16 இலட்சம் ரூபாய், இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 1.6 இலட்சம் ரூபாய், மதுரை மாவட்டத்திற்கு 7 இலட்சத்து 8,000 ரூபாய். கோவை மாவட்டத்திற்கு 32 இலட்சம் ரூபாய்